தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# அனைத்துலகத் தேர்வு

# 2011

# தமிழ்மொழி

## ஆண்டு 12

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்:

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. பழந்தமிழர் வீரம் பற்றி முழுமையாகக் கூறும் நூல்

அ) நாலடியார் ஆ) புறநானூறு
இ) அகநானூறு ஈ) மணிமேகலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. மூவேந்தர் ஒற்றுமையைச் சிதைத்தது

அ) வெளிநாடு ஆ) ஆரியம் இ) கலிங்கம் ஈ) களப்பிரர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் இவற்றை எவ்வாறு அழைத்தனர்?

அ) அருவி ஆ) கிணறு இ) கேணி ஈ) முந்நீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. வேங்கட மலைக்கும் குமரிமுனைக்கும் இடையே உள்ள பகுதி எது?

அ) இந்தியா ஆ) கேரளா இ) தமிழகம் ஈ) ஆந்திரா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. ஆரியரின் எந்தப் பாகுபாடு குமூக அடுக்குகளை ஏற்படுத்தியது?

அ) நிறப்பாகுபாடு ஆ) நால்வருணப்பாகுபாடு
இ) மொழிப்பாகுபாடு ஈ) நிலப்பாகுபாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. ஆரியர் எந்தப் பகுதியில் நாடோடிகளாக வாழ்ந்தனர்?

அ) குமரிக்கண்டம் ஆ) ஆபிரிக்கா

இ) இந்தியா ஈ) மெசப்பெத்தேமியா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. முதுகில் புண்பட்டதனை மானக்கேடு எனக் கருதி வடக்கிருந்து உயிர் நீத்த மன்னன் யார்?

அ) சேரலாதன் ஆ) கரிகாலன் இ) நெடுஞ்செழியன் ஈ) பெருவழுதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பஃறுளியாறும் பன்மலை அடுக்கமும் எங்கு இருந்தது?

அ) சிந்துவெளி ஆ) இலங்கை இ) குமரிக்கண்டம் ஈ) பூம்புகார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. தெற்கில் இருந்து வீசும் காற்று

அ) கொண்டல் ஆ) தென்றல்
இ) வாடை ஈ) சூறாவளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. யாழ்ப்பாண அரசின் தலைநகர் இருந்த இடம்

அ) பூநகரி ஆ) வவுனியா இ) பருத்தித்துறை ஈ) கந்தரோடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. அறநெறிக் காலத்தில் தமிழ்நாட்டில் வேரூன்றி இருந்த மதங்கள்

அ) இசுலாம் ஆ) கிறித்தவம் இ) சைவம் ஈ) சமணம், பௌத்தம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. மேதகு என்ற சொல் குறிப்பது

அ) சிறப்புடைய ஆ) மகிழ்வுடைய இ) வீரமுடைய ஈ) இகழ்வுடைய

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. தமிழ் தொன்மையான மொழி என்பதை நிறுவிய அறிஞர்களில் ஒருவர்.

அ) கார்டுவெல் ஆ) ஆறுமுகநாவலர்
இ) நாவுக்கரசர் ஈ) தனிநாயகம் அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. கி.பி. 2ம் நூற்றாண்டில் தமிழ் நாட்டுக்குள் நுழைந்தவர்கள்

அ) சிங்களவர் ஆ) நாடோடிகள் இ) களப்பிரர் ஈ) ஈரானியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூ

அ) முல்லைப்பூ ஆ) குறிஞ்சிப் பூ
இ) மருதப்பூ ஈ) நெய்தல் பூ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பவுணந்தியார் எழுதிய நூல்

அ) புறநானூறு ஆ) நன்னூல் இ) திருமந்திரம் ஈ) வீரசோழியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. மதிக்காக எடுக்கப்பட்ட விழா

அ) பொங்கல் விழா ஆ) இந்திரவிழா
இ) வாணிவிழா ஈ) கலைவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. அல்வழித் தொகைகள்

அ) ஏழு ஆ) ஆறு இ) ஐந்து ஈ) எட்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. சுடர் விளக்கானாலும் ______________ வேண்டும்.

அ) எழுதுகோல் ஆ) தூண்டுகோல் இ) ஊன்றுகோல் ஈ) தலைக்கோல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. வேற்றுமைகள்

அ) பத்து ஆ) ஆறு இ) ஐந்து ஈ) எட்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. சிற்றரசுத் தலைவர்கள் கொண்டிருந்த பட்டப் பெயர்கள்.

அ) ஆய்,வேள் ஆ) பெருங்குடி இ) இராசதீரன் ஈ) நெடுமுடியான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. சேனன், குத்திகன் ஆட்சி செய்த தலைநகர் இது.

அ) யாழ்ப்பாணம் ஆ) மதுரை இ) அநுராதபுரம் ஈ) மட்டக்களப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ஏழு தமிழர்கள் இவனுக்கு எதிராகப் படை எடுத்தனர்.

அ) துட்டகைமுனு ஆ) வட்டகாமினி
இ) பராக்கிரமபாகு ஈ) விஜயபாகு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. தரைவழியாக அரச படைகள் ____________________ நடந்து சென்றனர்.

அ) மணிமணியாக ஆ) கொத்துகொத்தாக
இ) அணிஅணியாக ஈ) அடுக்கடுக்காக

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பன்னீராயிரம் சிங்களவர்களைச் சிறைபிடித்த தமிழக மன்னன்.

அ) சேரன் செங்குட்டுவன் ஆ) நெடுஞ்செழியன்
இ) சுந்தரபாண்டியன் ஈ) கரிகாற் சோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. அழுக்காறு உடையான் கண் எது இருக்காது என வள்ளுவர் கூறுகிறார்.

அ) உயர்ச்சி ஆ) ஆக்கம் இ) அறிவு ஈ) புகழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. ஒரு குலத்தின் வாழ்வொழுக்கம் இவ்வாறு அழைக்கப்படும்.

அ) நல்லொழுக்கம் ஆ) குடிமை இ) பெருமை ஈ) பேராண்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை

அ) வரை ஆ) உண் இ) போ ஈ) படி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. நன்மைக்கு வித்தாகும்

அ) படிப்பு ஆ) நல்ல ஒழுக்கம் இ) பதவி ஈ) புகழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பொன் + குடம் என்பதைப் புணர்த்தினால்

அ) பொன்குடம் ஆ) பொன்க்குடம்
இ) பொற்குடம் ஈ) பொங்குடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, முழுவிடை தருக.

தமிழ்; உலகின் முதல் மொழியாயும் பழங்காலம் முதலே பண்பட்ட மொழியாயும், இரு வழக்கிலும் இன்றும் தன் தனித்தன்மையுடன் சிறந்து விளங்குகிறது. தொல்பழஞ் சிறப்பும், நனிமிகு புதுப்பொலிவும் தமிழ்மொழி போலப் பெற்றுள்ள மொழி உலகில் எதுவும் இல்லை என்பதை இன்றைய மொழி ஆய்வு தெள்ளத்தெளிவாய்க் காட்டுகிறது. இத்தகு சிறப்புகளெல்லாம் தம் மொழிக்கோ, அல்லது தாம் விரும்பும் மொழிக்கோ இல்லாமையைக் கண்டவர் கொண்ட காழ்ப்புணர்வே, தமிழைச் சிதைக்குமாறு அவர்களைத் தூண்டியது. அச்சிதைப்பிற்குத் துணையாகப் பிற ஒலிகளைத் தமிழில் புகுத்தினர். இதை வரலாறு உணர்த்துகிறது.

தமிழ் தோன்றிய குமரிக்கண்டம் இந்துமாக்கடலுள் மூழ்கிவிட்டது. இக்கண்டத்திலிருந்து தமிழர்கள் உலகின் பல பகுதிகளுக்குச் சென்றார்கள் என்பதை இந்துமாக்கடலில் சோவியத் அறிஞர்களால் செய்யப்பட்ட ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. குமரிக்கண்டப் பகுதியிலிருந்து இன்றைய ஆத்திரேலியப்பகுதியை இணைக்கும் கற்பாலம் இன்னும் அழியாமல் கடலுக்குள் உள்ளதை அவர்களின் 'முக்கடல் ஆய்வுகள்' என்னும் நூல் காட்டுகிறது. ஆத்திரேலியாவில் வாழும் பழங்குடி மக்கள் பேசும் மொழியில் இன்றும் ஏராளமான தமிழ்ச் சொற்கள் உள்ளன. தமிழில் உள்ள இறையனார் அகப்பொருள் உரையில் கூறியுள்ள முக்கழகங்கள் பற்றிய சான்றை மிகச்சிறந்த இலக்கியச்சான்றாகக் கொண்டுள்ளனர் சோவியத்நாட்டு அறிஞர்கள்.

வரலாற்றுக்காலம் தொடங்கி உலகளாவிய நிலையில் வளம் தந்தது தமிழ். 'கழகம்' என்னும் ஓர் அமைப்பை உருவாக்கி மொழிவளம் கண்ட தமிழர் படைத்த நூல்கள் பல. கழக இலக்கியங்களின் அகப்பாடல்களுடன், புறப்பாடல்களும் தமிழர்களின் நாகரிகம் மற்றும் பண்பாடுகளை உணர்த்துகின்றன.

தமிழ் மறையாய்த் தோன்றித் தானே தன் உயர் தகுதியினால் உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளும் ஐம்பெருங் காப்பியங்களும் சிற்றிலங்கியங்களும் தமிழின் தனிப்பெரும் சொத்துகளாகும்.

1. தமிழரின் நாகரிகம் மற்றும் பண்பாடுகளை உணர்த்துபவை எவை?

________________________________________

________________________________________

2. தமிழின் சொத்துகள் எனப்படுபவை யாவை?

________________________________________

________________________________________

3. சோவியத்நாட்டு அறிஞர்கள் எதைச் சிறந்த இலக்கியச் சான்றாகக் கொண்டுள்ளனர்?

________________________________________

________________________________________

4. மொழி ஆய்வுகள் தெள்ளத்தெளிவாய்க் காட்டும் உண்மை யாது?

________________________________________

________________________________________

5. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வு நூலின் பெயர் என்ன?

________________________________________

________________________________________

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. ஆரியர் எனப்படுவோர் யார்?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

2. கடல் விழா என்று அழைக்கப்படும் விழா எது?

________________________________________

________________________________________

________________________________________

3. இலங்கையில் பண்டைய சிற்றரசுகள் இருந்த இடங்கள் இரண்டு தருக?

4. **குறள்:-** அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு - இக்குறளின் பொருளை எழுதுக.

5. தென்றலின் வரவு பற்றிக் கூறும் தமிழ்க் காப்பியம் எது?

6. பல்லவர் துணையோடு ஆரியர் தமிழகத்தில் என்ன செய்தனர்?

7. வடக்கிருத்தல் என்றால் என்ன?

(புள்ளிகள் 10)

## 4) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

*தோல்வி நிலையென நினைத்தால் - மனிதன்*
*வாழ்வை நினைக்கலாமா?*
*வாழ்வை சுமையென நினைத்து - தமிழ்த்*
*தாயின் கனவை மிதிக்கலாமா*
*(தோல்வி )*

*விடியலுக்கில்லை தூரம்*
*விடிந்தும் மனதில் இன்னும் ஏன் - பாரம்*
*உன் நெஞ்சம் முழுவதும் வீரம் - இருந்தும்*
*கண்ணில் இன்னும் ஏன் ஈரம்*
*(தோல்வி )*

*உரிமை இழந்தோம்*
*உடைமையும் இழந்தோம்*
*உணர்வை இழக்கலாமா*
*உணர்வைக் கொடுத்து*
*உயிராய் வளர்த்த*
*கனவை மறக்கலாமா*
*(தோல்வி )*

1. அச்சங்கள் எதில் வேகட்டும் என்று கவிஞர் கட்டளை இடுகிறார்?

______________________________________________

______________________________________________

2. எவற்றை இழந்தாலும் உணர்வை இழக்கக்கூடாது என்கிறார்?

______________________________________________

______________________________________________

3. எதனை நாங்கள் நிலையென நினைக்கக்கூடாது எனக் கவிஞர் கூறுகிறார்?

______________________________________________

______________________________________________

4. யாருடைய கனவை மிதிக்கலாமா என்று கேட்கப்படுகிறது?

______________________________________________

______________________________________________

5. இப்பாடல் வரிகள் மூலம் நீர் உணர்ந்து கொள்வது என்ன?

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண/மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. தொகைகள் எத்தனை? வினைத் தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

2. அணிகள் நான்கையும் தந்து உவமையணிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

3. பணவரவு, காற்சங்கிலி, பலாப்பழம் இவை எவ்வகைப் புணர்ச்சிகள்.

தோன்றல்:

கெடுதல்:

திரிதல்:

4. பின்வரும் சொற்றொடர்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

படபட:

ஏங்கிஏங்கி:

தேடித்தேடி:

நடுநடுங்கி :

5. வழுக்கள் எத்தனை? கால வழுவிற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

(புள்ளிகள் 15)

6) தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

கோடிக்கணக்கான உயிரிகள் இவ்வுலகில் வாழ்கின்றன. இந்த உயிரிகள் அனைத்திலும் மேலான படைப்பாகக் கருதப்படுபவன் மாந்தனே. பகுத்தறிவு என்னும் சிந்திக்கும் திறன் அவனிடம் இருப்பதனால் தான் அவனை உயர்திணை எனக் கூறப்படுகிறது. ஆறறிவு படைத்த மாந்தன் தொடக்கத்தில் விலங்குகளுடன் விலங்குகளாகவே வாழ்ந்தான். இதற்கு என்ன கரணியம். சிந்திக்கும் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டிய மொழி அவனிடம் தோற்றம் பெறவில்லை. சிந்திக்கச் சிந்திக்க மாந்தனிடம் மொழி தோற்றம் பெறத் தொடங்கியது. மொழி வளர்ச்சியும் சிந்தனை வளர்ச்சியும் ஒன்று சேர்ந்து வளரவளர மாந்தன் விலங்குநிலை மாற்றத்தில் இருந்து விடுபட்டு நாகரிக வாழ்கைக்கு மாறினான்.

இதனால் தான் குகைகளில் வாழ்ந்த மாந்தன், குடிசைகளில் வாழ்ந்த மாந்தன் இன்று அடுக்கு மாடிகளில் வாழ்கிறான். இலை தழைகளை உடுத்திய மாந்தன் இன்று பலவிதமான நாகரிக உடைகளை அணிகிறான். பச்சைக் காய்கறிகள் உண்ட மாந்தன் அறுசுவை உணவுகளை உண்கிறான். நாகரீகத்திலும் சிந்தனையிலும் அதீத வளர்ச்சி பெற்ற மாந்தன் இன்று உலகம் முழுவதையுமே சுருக்கி தன் அருகே கொண்டு வரும் இணையத்தையும் கண்டு கொண்டான். இத்தனை விரைவான வளர்ச்சி பெற்ற மாந்தன் இன்று பல நிலைகளிலும் மாந்தநேயம் என்ற மதிப்பான ஒன்றை இழந்து வருவது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகக் காணப்படுகிறது. மொழியைப் படைத்து முழு உலகையும் விஞ்ஞான வளர்ச்சியினால் ஒன்றிணைத்த மாந்தன் இன்று தன் வளர்ச்சியினால் தன்னினத்தைத் தானே அழித்துக் கொண்டு இருக்கிறான்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள் :**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

(புள்ளிகள் 05)

7) முந்நூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

- ☆ ஒழுக்கம் பற்றி திருவள்ளுவர் கூறியதை தொகுத்து எழுதுக.
- ☆ தமிழரது கலை, பழக்கவழக்கங்களில் ஆரிய ஊடுருவல் ஏற்படுத்திய தாக்கம்.
- ☆ ஆண்டு 12 வரையும் நீர் தாய்மொழிக் கல்வியை கற்றதன் நோக்கமும் தாய் மண்ணிற்கு ஆற்ற விரும்பும் பணியும்.
- ☆ நீர் கலந்து கொண்ட மே 18 எழுச்சிப் பேரணி.

(புள்ளிகள் 20)